2015 ஆகஸ்ட் 27]

அவற்றில் 3,032 மாணவ, மாணவியர் தங்கிப் பயனடைந்து வருகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணவீட்டுச் செலவினமாக 750 ரூபாய் வழங்கி, அவர்களுக்கு நல்ல உணவைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழந்தைகள் கல்வி பயில்கின்றபோது, தொழில் சார் கல்விக்காக 50,000 ரூபாய் வீதமும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்காக 30,000 ரூபாய் வீதமும் வழங்கி, அவர்கள் படித்து முடித்ததற்குப் பிறகு, அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகளில் தொகுப்பூதிய அடிப்படையில் அந்தப் பிள்ளைகளுக்கு வேலையும் வழங்கப்படுகிறது. மேலும், ஆசிரியர் பயிற்சியை முடித்தவுடன், தனியார் பள்ளியிலே ஆசிரியைகளாகவும் பணிபுரிவதற்கான வழிவகைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதன்படி இந்தக் குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***52920—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி நகராட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS

[2015 ஆகஸ்ட் 27

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி நகராட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன் அவர்கள்.*

திரு. இரா. மணிமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு தெய்வத் தாய் அம்மா அவர்களைப்போல இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகத்திலுள்ள தலைவர்களிலேயே இதுபோன்ற தலைவர் இல்லை, இல்லவே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், சோதனைகளை சாதனைகளாக்கி, சாதனைகளை சரித்திரமாக்கி, சரித்திரமாக வாழும் மனித தெய்வம், மாதர் குல மாணிக்கம், மங்கையர் திலகம், மனிதப் புனிதவதி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் அம்மா பக்கம், அம்மா அவர்கள் மக்கள் பக்கம், அதனால் நீதி அம்மா அவர்கள் பக்கம் என்பதை நினைவுகூர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

எனது பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி அறிஞர் அண்ணா மேல்நிலைப் பள்ளி, சரோஜினி வரதப்பன் மேல்நிலைப் பள்ளி, பூந்தமல்லி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சென்னீர்குப்பம் மேல்நிலைப் பள்ளி, திருமழிசை மேல்நிலைப் பள்ளி, கோலப்பஞ்சேரி மேல்நிலைப் பள்ளி, மேல் மணம்மேடு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவேற்காடு மேல்நிலைப் பள்ளி, மாங்காடு மேல்நிலைப் பள்ளி, குன்றத்தூர் மேல்நிலைப் பள்ளி, கோவூர் மேல்நிலைப் பள்ளி ஆகிய இத்தனை பள்ளிகளும் பூந்தமல்லியில் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் உயர் கல்வி பயில 30 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ள காரணத்தினாலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவ, மாணவியர் குடும்பங்களைக் கருத்தில் கொண்டும், உயர் கல்வி பயில பூந்தமல்லியிலேயே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவங்குவதற்கு தமிழகத்தின் சரஸ்வதியாக, கல்வியில் புரட்சி செய்யும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

2015 ஆகஸ்ட் 27]

நல்லாட்சியில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பூந்தமல்லி நகராட்சியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார். பூந்தமல்லி ஒரு நகராட்சிப் பகுதியாகும். பொதுவாகவே, கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவதற்கு, மாநகராட்சிப் பகுதியாக இருந்தால் 2 ஏக்கர் நிலமும், நகராட்சிப் பகுதியாக இருந்தால் 3 ஏக்கர் நிலமும் வைத்திருக்க வேண்டும். கிராம ஊராட்சி அல்லது பேரூராட்சி என்று சொன்னால் 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. முன்பு, ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், கிராம ஊராட்சியில் பத்து ஏக்கர் நிலமும், நகராட்சிப் பகுதியில் 5 ஏக்கர் நிலமும், மாநகராட்சிப் பகுதியில் 3 ஏக்கர் நிலமும் இருக்க வேண்டும் என்ற விதி இருந்தது. ஆனால், தற்போது பெருகி வரும் மக்கள்தொகையின் அடிப்படையிலும், உருவாகி வரும் கல்லூரி மற்றும் பள்ளிகள் போன்றவற்றின் அடிப்படையிலும், நிலம் கையகப்படுத்துவது என்பது சற்று சிரமமாகத்தான் இருக்கின்றது. அதை அறிந்துதான், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகராட்சிப் பகுதியிலே 5 ஏக்கர் என்ற நிலையை மாற்றி, தற்போது 3 ஏக்கர் இருந்தால் போதும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான், தற்போது நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அத்தனை கல்லூரிகளுக்கும் நிலங்கள் கையகப்படுத்தப்படுவதோடு, கட்டடப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், தொடரும் செலவினம், தொடராச் செலவினம் என்ற நிலைகள் இருக்கின்றன. தொடரும் செலவினம் என்று சொன்னால், ஆசிரியர்

மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதாகும். அவர்களுக்காக நாம் ஆண்டு ஒன்றுக்கு செலவழிக்கும் தொகை மட்டும் 92,29,000 ரூபாயாகும். தொடராச் செலவினம் என்று சொன்னால், கட்டடங்கள் கட்டுவதற்கு 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவாகிறது. மேற்கொண்டு, அதற்குரிய தளவாடச் சாமான்கள், கணினி, மேசை, நாற்காலி, அலுவலகச் செலவினம் போன்றவற்றிற்கு 30,50,000 ரூபாய் தேவைப்படுகிறது. ஆக மொத்தம், ஒரு கல்லூரி ஆரம்பித்து அது நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று சொன்னால், செலவினமாக ஓர் ஆண்டிற்கு கட்டடங்கள் கட்டுவதையும் சேர்த்து 8 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவாகிறது. மேலும், நிலம் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலையும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற பகுதி நகராட்சிப் பகுதியாகும். அந்தப் பகுதியிலே 3 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்வாரேயானால், அந்த இடத்திற்கு நகராட்சியின் அனுமதி பெற வேண்டும். பூந்தமல்லியில் அதிகப் பள்ளிகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தப் பள்ளிகளோடு மட்டுமல்லாமல், கல்லூரியும் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சொல்கிறார்கள். இக்கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

புதிய கட்டடம்

***34897—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—